**செய்தி வெளியீடு எண்: 209** **நாள்: 26.03.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (26.3.2018) கோயம்புத்தூர், தொண்டாமுத்தூரில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை**

---

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

தமிழ்நாடு அரசின் சார்பாக, பவானி ஆற்றிலிருந்து நீர் எடுக்கப்பட்டு இந்தப் பகுதி மக்களுக்கு வழங்குகின்ற கூட்டுக் குடிநீர் திட்டம் புதிதாக கட்ட இருக்கின்ற ஆற்றுப்பாலத்திற்கு அடிக்கல் நாட்டுகின்ற நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு எஸ்.பி.வேலுமணி அவர்களே,

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே நல்ல பல அறிவுரைகளையும், கருத்துக்களையும் வழங்கி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே,

சுருக்கமாகச் சொன்னாலும், சிறப்பான கருத்துக்களை இங்கே எடுத்துவைத்து அமர்ந்திருக்கின்ற சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு.பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே,

இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி. சீனிவாசனி அவர்களே,

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே, மாண்புமிகு மின்சாரம், ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களே,

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.கே.சி.கருப்பணன் அவர்களே,

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் உடுமலைப்பேட்டை கே.ராதாகிருஷ்ணன் அவர்களே,

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.துரைக்கண்ணு அவர்களே,

மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் திரு.ஆர்.ப.உதயகுமார் அவர்களே, மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் டாக்டர்.வி. சரோஜா அவர்களே,

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்களே மற்றும்

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

முன்னாள் அமைச்சர் பெருமக்களே,

முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளே,

கூட்டுறவு சங்க நிர்வாகிகளே,

பெரியோர்களே, தாய்மார்களே, பத்திரிகையாளர்களே, ஊடக நண்பர்களே,

அனைவருக்கும் மனமார்ந்த வணக்கத்தினை இந்த நேரத்திலே சமர்ப்பிக்கின்றேன்.

எண்ணற்ற திட்டங்களை நாங்கள் கொடுத்திருக்கின்றோம், ஆனால், இந்த ஆட்சியில் எதுவுமே நடக்கவில்லை என்ற பொய் குற்றச்சாட்டை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அம்மா அவர்களாலும், தொடர்ச்சியாக அம்மாவினுடைய அரசும் பல்வேறு திட்டங்களை மக்களுக்கு வாரி, வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றது.

அம்மா அவர்கள் 2011–ல் சட்டமன்ற தேர்தலில் கொடுத்த வாக்குறுதியான, உழைக்கின்ற மகளிருக்கு, குறிப்பிட்ட காலத்திற்குள் வேலைக்குச் சென்று வீடு திரும்புவதற்காக, அம்மா இருசக்கர வாகனம், உச்சவரம்பு மானியமாக ரூபாய் 25 ஆயிரம் அரசே வழங்கி, 1 இலட்சம் வாகனம் என நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 3 இலட்சத்து 36 ஆயிரம் நபர்கள் பதிவு செய்யப்பட்டு அம்மாவினுடைய அரசால் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அம்மா அவர்கள் பிறந்தநாள் அன்று, பாரதப் பிரதமர் அவர்கள் சென்னைக்கு வந்து அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்கள் என்பதை கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல, அம்மா பிறந்தநாளைக் குறிக்கின்றவகையில், ஒவ்வொரு வருடமும் மரக்கன்றுகள் நடப்படும். இந்த ஆண்டு 70வது ஆண்டு பிறந்தநாள் அன்று 70 இலட்சம் மரக்கன்றுகள் நடும் விழா, பாரதப் பிரதமர் அவர்களின் திருக்கரங்களால் மரக்கன்று நடப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டது என்பதை சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகம் முழுவதும் அருமையான சாலைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. Airport மாதிரி அனைத்து வசதிகளுடன்கூடிய Busport கோயம்புத்தூர், சேலம், மதுரை போன்ற பெரிய நகரங்களில் அமைக்க மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மெட்ரோ இரயில் திட்டம் வேண்டுமென்று இங்கு அனைவராலும் வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று, அம்மாவினுடைய அரசு அதற்குத் தேவையான திட்டங்களை தீட்டி அந்தத் திட்டமும் கோவை மாநகர மக்களுக்கு வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல உக்கடம் பாலத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இந்தப் பாலம், ஆற்றுப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு, ஒப்பணக்கார வீதி வரை மேம்பாலம் அமைத்தல். உக்கடம் ஆற்றுப்பாலம் மேம்பாலம், கோவை மாநகரில், திண்டுக்கல்–பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் கருப்புக்கடை பகுதியில் ஆரம்பித்து உக்கடம் மார்க்கெட் பகுதியில் முடிவடைகிறது. தற்போது அடிக்கல் நாட்டப்பட்டுள்ள இந்த மேம்பாலமானது 3 பகுதிகளை உள்ளடக்கியது. ஆற்றுப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு வரையிலான 1.36 கிலோமீட்டர் நீளமுள்ள முதல் பகுதி 4–வழி ஓடுதளமாகவும், உக்கடம் சந்திப்பு முதல் ஒப்பணக்கார வீதி 345 மீட்டர் நீளமுள்ள இரண்டாம் பகுதி 2–வழி ஓடுதளமாகவும், டவுன்ஹால் முதல் உக்கடம் சந்திப்பு 284 மீட்டர் நீளமுள்ள மூன்றாம் பகுதி 2–வழி ஓடுதளமாகவும் அமைக்கப்படும். ஆகமொத்தம், 1.970 கிலோமீட்டராக இந்தப் பாலத்தினுடைய நீளம் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, நிலஎடுப்பு, பாலம் அமைக்கும் பணி உட்பட ரூபாய் 215 கோடி 51 இலட்சம் இந்த திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். இம்மேம்பாலமானது கோவை மாநகரத்தினுடைய மத்திய பகுதியான உக்கடத்தில் அமைந்துள்ளது. இதனால் தற்போது உக்கடம் பகுதியில் நிலவிவரும் போக்குவரத்து நெரிசல் வெகுவாகக் குறையும். அதோடு, ஒரு மணிநேரம் காத்திருந்து செல்லக்கூடிய சூழ்நிலையிருக்கின்றது. கேரளா, பொள்ளாச்சி மற்றும் பழனியிலிருந்து கோவை மாநகரத்திற்கு வரும் வாகனங்கள் எளிதாக செல்லும்வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இதனால் கோவை மற்றும் அருகாமையிலுள்ள சுமார் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயனடைவார்கள். இன்றைக்குகூட ஒரு சில பத்திரிகைகளில் இந்த பாலம் சரியில்லை என்ற ஒரு செய்தி வந்துள்ளது. அது முற்றிலும் தவறு. மக்கள் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு, உகந்தவாறு இந்தப் பாலம் மாற்றி வடிவமைக்கபடும் என்ற செய்தியை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தாலும், மக்களுக்கு பயன்படும் திட்டமாகத்தான் அம்மாவினுடைய அரசு செயல்படுத்தும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி.

வணக்கம்.

––––––

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**